## ‘ஐ.ஐ.டி. யில் இருந்து அவர்களில் ஒருவர்’

“எனது அப்பாவுக்கு காய்ச்சல் அடித்தது. அப்போது ஒரு சந்நியாசி வந்தார். அந்த சந்நியாசியின் பெயர் எனக்கு மறந்து விட்டது. சந்நியாசி மாட்டுக் கோமியத்தைக் குடிக்கச் சொன்னார். கோமியம் குடித்த உடன், 15 நிமிடத்தில் அவருக்கு ஜுரம் போய்விட்டது. மேலும், ‘பாக்டீரியா’, ‘பூஞ்சை’, ‘செரிமானக் கோளாறு’ பிரச்சினைகளை எதிர்க்க கோமியம் சிறந்த மருந்து”. இப்படிப் பேசி இருப்பவர், மூடநம்பிக்கைகளில் மூழ்கிப் போன சாதாரண ஒருவர் அல்ல.

‘இந்தியாவின் சிறந்த அறிவியல் கல்வி நிறுவனம்’ என்று பெயர் எடுத்துள்ள சென்னை ஐ.ஐ.டி.யின் இயக்குநர் காமக்கோடி. ‘மாட்டுச் சிறுநீர் உடலுக்குக் கேடு’ என அறிவியல்ரீதியாக சொல்லப்பட்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், அறிவியல் ரீதியான நிறுவனத்தின் இயக்குநர் இப்படிச் சொல்லியிருப்பது குறித்து பலரும் கண்டனங்களையும் விமர்சனங்களையும் தெரிவித்து வருவதுடன், ‘மன்னிப்புக் கேட்க வேண்டும்’ என்றும் சமூக வலைதளங்களில் கருத்துக் கூறி வருகின்றனர்.

அரசியல் ரீதியாக விமர்சிக்கப்படும் அதே வேளையில், ஐ.ஐ.டி. இயக்குநரின் அறிவியலுக்குப் புறம்பான கருத்துக் குறித்து, கால்நடை மருத்துவர்களும் எச்சரிக்கை செய்து வருகின்றனர். “மனிதர்கள் குடிப்பதற்கு மாட்டுச் சிறுநீர் (கோமியம்) பாதுகாப்பானது அல்ல என இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஏற்கெனவே எச்சரிக்கை செய்துள்ளது. ‘பசுக்கள், எருமைகளின் சிறுநீர் மாதிரிகளை, ‘இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம்’ ஆய்வுக்கு உட்படுத்தி, அதில், மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய 14 வகையான பாக்டீரியாக்கள் இருக்கின்றன’ என விளக்கியுள்ளது.

ஆனால், அறிவியல் துறையில் முன்னணியில் இருக்கும் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் நிரூபிக்கப்பட்ட அறிவியலுக்குப் புறம்பாகப் பேசுகிறார். அவர், அவரது கருத்தைத் திரும்பப் பெற வேண்டும் அல்லது பொதுவெளியில் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென ‘தமிழ்நாடு மாணவர் கழகம்’ உள்ளிட்ட அமைப்புகள் குரல் கொடுத்துள்ளன.

‘எந்த வழியிலாவது தமிழ்நாட்டு அரசியலில், பண்பாட்டில் குழப்பம் உருவாக்க வேண்டும்’ என முயற்சி செய்து வருகிறது ஒரு கூட்டம். ஐ.ஐ.டி.யிலிருந்தாலும் ‘நானும் அவர்களில் ஒருவர்’ என்று அதை வெளிப்படுத்தி விட்டார் காமக்கோடி.

## ஃப்ளாஷ்பேக்





எஸ்.சேதுராமன்

### “உண்மையுடன் செயல்பட்டால் உயரம் எட்டலாம்!”

1993-ஆம் ஆண்டு கழகத்தில் நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில், தமிழ்நாடு முழுவதும் இருந்து கழக உடன்பிறப்புகள் கலைஞரின் கரங்களை வலுப்படுத்த அணிதிரண்டனர். மதுரையில் இருந்து அன்றைய ஒருங்கிணைந்த மதுரை மாவட்டச் செயலாளர் அக்கினி ராஜ் அவர்கள் தலைமையில், மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினராக இருந்த நானும், இன்றைய மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி ஆகியோரும் தலைவர் கலைஞரை, சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்தோம். அச்சமயத்தில் மதுரை மேற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த அமைச்சர் பி.மூர்த்தி அவர்களிடம், “கழகத்துக்கு உண்மையுடன் செயல்பட்டால், எந்த உயரத்திற்கு வேண்டுமானாலும் வரலாம்” என்று ஆலோசனை வழங்கினார் கலைஞர். தீர்க்கதரிசனமாக இன்றைக்கு அது நடந்து இருக்கிறது.

**– எஸ்.சேதுராமன், மாநிலத் துணைச் செயலாளர், விவசாயத் தொழிலாளர் அணி, மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### ஜனநாயகப் பயிற்சி!

1958-ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் தேதி ‘கே.வி.கே. சாமி நினைவு மன்ற’த்தின் ஆண்டுவிழா, சென்னை, புரசை வாக்கத்தில் நடைபெற்றது. ஜனநாயகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து, அந்நிகழ்ச்சியில் விளக்கிப் பேசினார் பேரறிஞர் அண்ணா. “அரசியலில் தெளிவு இருந்தால், சலிப்புத் தோன்றாது. நாட்டு மக்கள் விழிப்புணர்வு பெற, ஜனநாயகப் பயிற்சி தேவை. ஜனநாயகம் என்பது ஆளுகிற முறை மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை நெறி” என்றார் அண்ணா.

## மாநாடு

ர.பிரகாசு **47**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

ஓவியம் : சிகரன்



# திருவாரூரில், தி.மு.க. திருவிழா!

தஞ்சை மாவட்டத் தி.மு.கழக மூன்றாவது மாநாடு 1958 மே 10, 11 ஆகிய தேதிகளில் முத்தமிழறிஞர் கலைஞரின் சொந்த ஊரான திருவாரூரில் கூடியது. புகைவண்டி நிலையத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தின் முன்னால் அலங்கரிக்கப்பட்ட யானை, குதிரை, ரதங்கள், அண்ணா உருவம் தாங்கிய கப்பல், சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் உருவம் தாங்கிய ஆகாய விமான வடிவில் அலங்கரிக்கப்பட்டிருந்த வாகனம் அணிவகுத்துச் சென்ற காட்சிகளை, திருவாரூர் மக்கள் திருவிழா போல கண்டு களித்தனர்.

ஊர்வலத்தின் மொத்தக் கூட்டம் தொடக்கத்தில் 50 ஆயிரமாக இருந்தது, மாநாட்டுப் பந்தலை அடையும்போது ஒரு லட்சம் பேரைத் தாண்டிவிட்டது. மாநாட்டுப் பந்தலின் புறவாயில் தாஜ்மகாலைப் போல தென்னங்கீற்றால் அழகுற அமைக்கப்பட்டிருந்தது. அதன் உச்சியிலே பேரறிஞர் அண்ணாவின் உருவம் கம்பீரமாய் தோற்றமளித்தது. உள்ளே நுழைந்தால், ‘கோட்டை’ தோற்றத்தில் மற்றொரு வாயில். அதன் உச்சியில் பட்டுக்கோட்டை அழகிரி, பன்னீர்செல்வம், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் படங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மாநாட்டுப் பந்தலுக்கு ‘பன்னீர்செல்வம்’ பெயர் சூட்டப்பட்டிருந்தது. மன்னை சுந்தரேசன், ‘திராவிடப் பண்’ பாட, வரவேற்புக் குழுத்தலைவர் என்.எஸ்.இளங்கோ அனைவரையும் வரவேற்க, ப.உ.சண்முகம் மாநாட்டைத் தொடங்கிவைத்து உரையாற்றினார்.

மீண்டும் மாலை 3.00 மணிக்கு மாநாடு கூடியவுடன், கே.ஏ.மதியழகன் தலைமை உரை நிகழ்த்தினார். அ.பொன்னம்பலனார், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, ஏ.கோவிந்தசாமி, வழக்கறிஞர் பி.ஆர்.கோகுலகிருட்டிணன், பேராசிரியர் க.அன்பழகன், ஈ.வெ.கி.சம்பத் ஆகியோர் தனித்தனி தலைப்புகளில் உரையாற்றினர். இரவு 11 மணிக்கு கலைஞரின் ‘உதயசூரியன்’ நாடகத்துடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

**“தி.மு.கழகத்தின் மற்ற மாவட்ட மாநாடுகளில் செலவுபோக எஞ்சிய தொகை சொற்பமாகவே இருந்தது. ஆனால், இம்மாநாட்டில் செலவுபோக மீதத் தொகையாக 20 ஆயிரம் ரூபாய் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. மாநாட்டு ஏற்பாடுகளோ மிகப் பிரமாண்டமாக இருந்தன!”**

மறுநாளும் காலை முதல் மாலை வரை கழகத்தின் முன்னணி போர்ப்படைத் தளபதிகள் பலர் சொற்பொழிவாற்றினர். மதிய உணவு இடைவேளையில் ‘நாகூர்’ அனீபா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. ‘மகளிரும் நமது கழகமும்’ என்ற தலைப்பில் உரையாற்றிய பொற்செல்வி அவர்கள், இராமாமிர்தத்தம்மையார், தருமாம்பாள், நாகம்மையார் போன்றோரின் பெரும்பணிகளைப் பட்டியலிட்டுப் பேசினார். ‘பெண்கள் முன்னேற்றம்’ குறித்து சற்குணமும், ‘மகளிர் மன்றம்’ என்ற தலைப்பிலே அன்னை சத்தியவாணிமுத்துவும் எழுச்சி உரையாற்றினர்.

‘The New Spirit of the South’ என்ற தலைப்பிலே ஆங்கிலத்தில் உரையாற்றிய வழக்கறிஞர் வி.பி.இராமன், ‘தி.மு.கழகத்தில் இருப்போர் எல்லோரும் திராவிடர்களே தவிர, வேறு ஜாதியினர் இருக்க முடியாது. இன்றுதான் திராவிடர்களுக்குப் புதிய விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது’ என்றார்.

‘இந்தியைத் திணிக்காதே’, ‘தென்னக உரிமைகளை விட்டுக் கொடுக்காதீர்’, ‘சாதி உணர்ச்சியைக் களைய சட்டம் வேண்டும்’ என்பது உட்பட 17 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

கலைஞர் இந்த மாநாட்டில் நன்றியுரை மட்டுமே நிகழ்த்தினார். ஆனால், இந்த மாநாட்டுக்கும் கலைஞருக்கும் குறிப்பிடத்தக்க சிறப்பு ஒன்று உண்டு. தி.மு.கழகத்தின் மற்ற மாவட்ட மாநாடுகளில் செலவுபோக எஞ்சிய தொகை சொற்பமாகவே இருந்தது. ஆனால், இம்மாநாட்டில் செலவுபோக மீதத் தொகையாக 20 ஆயிரம் ரூபாய் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. மாநாட்டு ஏற்பாடுகளோ மிகப் பிரமாண்டமாக இருந்தன.

இரண்டுக்கும் காரணம் கலைஞர். ஏனெனில் அவர்தான் இந்த மாநாட்டின் பொருளாளர். அதன்பிறகே திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் மக்கள் இயக்கத்தின் பொருளாளர் ஆனார் முத்தமிழறிஞர் கலைஞர்.

...கூட்டம் திரளும்

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **47**


“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# 30 வயதில் ஒரு வாழ்க்கை வரலாறு!

‘வடநாட்டு வணிக வேந்தன்’ டால்மியா. தமிழ்நாட்டின் ஒரு ரயில்வே நிலையமும் அதைச் சார்ந்திருக்கும் பகுதியும் அவன் பெயரால் ‘டால்மியா புரம்’ என்று அழைக்கப்பட்டு வருகிறது. கன்னித்தமிழ்ப் பெயரான ‘கல்லக்குடி’யை அழித்துவிட்டு வடநாட்டு முதலாளியின் பெயரா?” என பேரறிஞர் அண்ணா எழுப்பிய கேள்வி அன்றைய தமிழ்நாட்டின் நிலையைச் சொல்லும்.

கல்லக்குடி பெயரை மாற்ற அரசாங்கத்திடம் முறையிட்டும் தீர்வு இல்லையென, ஓர் அறப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுக்கிறார், பேரறிஞர் அண்ணா. அந்த அறப்போருக்கு முத்தமிழறிஞர் கலைஞரை முதல் தளபதியாக நியமிக்கவும் செய்கிறார்.

1953-ஆம் ஆண்டு ஜூலை 15 அன்று கலைஞர் தலைமையில், நடைபெற்றது அந்த அறப்போர். ‘டால்மியாபுரம்’ என்னும் பெயர்ப் பலகையின் மீது அழகுத் தமிழில் ‘கல்லக்குடி’ என்னும் பெயரை ஒட்டினார், கலைஞர். விதிக்கப் பட்டது, 6 மாதக் கடுங்காவல் தண்டனை. 180 நாட்கள் சிறைவாசம். இந்தக் காலகட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பற்றி வெளியான வாழ்க்கை வரலாற்று நூல் தான் ‘கடமை வீரர் கருணாநிதி’.




சம்பவத்துடன் தொடங்குகிறது இந்த நூல். ‘அஞ்சா நெஞ்சன்’ அழகிரிசாமியுடனான அறிமுகம், தமிழ் மொழி உரிமைப் போராட்டம், தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம், மாணவ நேசன், முரசொலி, ‘திராவிட நாடு’ இதழில் ‘இளமை பலி’ கதை, ‘திராவிடர் கழகக் கொடி வடிவமைப்பு’, ‘கல்லக்குடிப் போராட்டம்’ எனத் தொடர் சம்பவங்களின் தொகுப்பாக நீள்கிறது இந்தப் புத்தகம்.

இந்நூல் வெளிவந்த போது கலைஞர் 30 வயது கூட நிரம்பியிராதவர். அந்தவகையில், இது அவர் குறித்து எழுதப்பட்ட முதல் வாழ்க்கை வரலாற்று நூலாகவும் இருக்கலாம். கலைச்செல்வன் என்பவர் எழுதி, கலைமன்றம் வெளியீடாக 1953-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்நூல் வெளியாகி இருக்கிறது. தற்போது, தமிழிணைய மின்னுலகத்தில் படிக்கக் கிடைக்கிறது.

கலைஞர் இளைஞராக இருந்த போது முன்னின்று நடத்திய அரசியல் போராட்டங்களை, மேற்கொண்ட சாகசங்களை, கொள்கைச் சமர்களை இளம் தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் நோக்கத்தில் இந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

புதுவையில் நடைபெற்ற ‘திராவிடர் மாநாட்டில்’, ‘திராவிடர் நடிகர் மன்றம்’ சார்பில், அரங்கேற்றம் செய்யப்பட்ட ‘சாந்தா’ நாடகத்திற்காகத் தாக்குதலுக்கு ஆளாகி தப்பிப்பிழைத்த கலைஞரின் துணிகரச் சம்பவத்துடன் தொடங்குகிறது இந்த நூல்.

தன்னுடைய தனிவாழ்வை விடவும், கட்சி என்றதும் கடமை உணர்வுடன் களம் காணும் கலைஞரின் பண்பு, நூல் முழுக்க பல இடங்களில் நினைவுகூரப்படுகிறது.

கட்சி ஒரு போராட்டத்தைத் தலைமை தாங்கச் சொல்லிவிட்ட காரணத்தால், அவர் தன்னுடைய அகவிருப்பம் சார்ந்த விஷயங்களை அடுத்த நிலைக்குத் தள்ளி வைக்கிறார். அரசியலும், சமூகமும் இவற்றை மேம்படுத்த உதவும் பெரியார்-பேரறிஞர் வழி வந்த கொள்கையுமே அவருக்கு முக்கியமானவையாகப் படுகின்றன. இந்த நூலுக்கான தலைப்பும் அப்படியே உருவாகியிருக்க வேண்டும். கடமை வீரராகவே கடைசி வரை வாழ்ந்த கலைஞரின் ஆரம்பக்கால வரலாற்றை, நம் கண் முன் நிறுவுகிறது இந்நூல்.


...வாசிப்போம்.

இந்த நூலைப் படிக்க QR CODE-ஐ ஸ்கேன் செய்யவும்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

725

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.